முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம். விழுப்புரம்.

S.C.No.69/2024

LW –10 (PW –8)

| பெயர்; | சுரேஷ்பாபு | மதம் | |
|---|---|---|---|
| த.பெ. | துரைராஜ் | தொழில் | |
| ஊர் | வடலூர் | வயது | 61 |
| மாவட்டம் | கடலூர் | தேதி | 07/04/2026 |

இன்று (07.04.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜரில்லை குவிமுசை 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

சத்தியமாக சொல்கிறேன்

முதல் விசாரணை

நான் தற்போது தமிழநாடு துறையில் திருவள்ளூர் மாவட்டம், மாவட்ட குற்றப்பிரிவில் துணை காவல் கண்காணிப்பாளராக பணி புரிந்து 31.5.2025 அன்று பணி ஓய்வு பெற்று எனது சொந்த ஊரான வடலூரில் வசித்து வருகிறேன் கடந்த 2.5.2018ம் தேதி பகல் 1 மணிக்கு காவல் ஆய்வாளராக கண்டமங்கலம் காவல் நிலையத்தில் பணியிலிருந்தபோது காவல் நிலைய உத வி ஆய்வாளர் திரு பாலமுருகன் மற்றும் காவலர் 2201 வெங்கிடேசன் மற்றும் காவலர் ராமன் 1695 ஆகியோர்கள் ஒரு எதிரியுடன் நிலையம் ஆஜரானார்கள் உதவி ஆய்வாளர் என்னிடத்தில் ஒரு தனி அறிக்கையுடன் எதிரியையும் ஆஜ்ர்படுத்தினார். நான் உதவி ஆய்வாளர் கொடுத்த தனி அறிக்கையைப் பெற்று கா.நி.கு.எண். 251/2018 பிரிவுகள் 294(பி), 384, 353, 506(2) 307 இதச உ/இ 3 of TNPPD Actல் முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ5ல் பதிவு செய்தேன். அதன் பின்னர் கிராம நிர்வாக அலுவலர் திரு வசந்தகுமார் மற்றும் கிராம உதவியாளர் திருமதி கலைச்செல்வி ஆகியோர்களுக்கு போனில் தகவல் சொல்லி சம்பவ இடத்திற்கு வரவழைத்தேன். நான் காவல் நிலையத்திலிருந்து புறப்பட்டு சம்பவ இடத்திற்குசென்றேன். சம்பவ இடத்தை பார்வையிட்டேன். சம்பவ இடத்தில் மதியம் 1.30 மணி முதல் 2 மணி வரை சம்பவ இடத்தில் சாட்சிகள் வசந்தகுமார் மற்றும் கலைச்செல்வி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் **அ.த.சா–ஆ6** மற்றும் மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ7** தயார் செய்தேன். அதன் பின்னர் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் **அ.த.சாஆ8** தயார் செய்து 2 மணி முதல் 2.30 மணி வரையில் சம்பவ இடத்திலிருந்த வழக்கின் சொத்தான (1) பிஒய்.01.பி டபிள்யு 6199 கிரே கலர் மாருதி ஸ்விபிட் கார் ஒன்று (தற்போது காவல் நிலைய பொறுப்பில் உள்ளது) அது **சா.பொ.1** (2) சுமார் 96 செ.மீ நீளமும், சுமார் 3 செ.மீ அகல மும் கொண்ட உருட்டுக் கட்டை ஒன்று **சா.பொ.2** (3) மரக்கைப்பிடியுடன் கூடிய சுமார் 72 செ.மீ நீளமும் சுமார் 13 செ.மீ மர கைப்பிடியுடன் கூடிய வீச்சருவாள் ஒன்று **சா.பொ.3** (4) உடைந்த கண்ணாடி ட கிளாஸ் துகள்கள் 5 எண்ணிக்கை **சா.பொ.4** ஆகியவற்றை கைப்பற்றினேன். மேற்படி சம்பவ இட சாட்சியான பாபு மற்றும் பாலாஜி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியா வாக்குமூலம் தயார் செய்தேன். அதன் பின்னர் உதவி ஆய்வாளர் கே வி பாலமுருகன் ஆஜர் செய்த எதிரி கதிரவன் என்பவரை காவல் நிலையத்தில் கைது செய்து எதிரியை திரேக பரிசோதனை செய்து பாரா வசம் ஒப்படைத்தேன். அதன் பின் தலைமறைவு எதிரியை ஜனா (எ) சின்ன ஜெனா என்பவரை தேடிச்சென்றபோது என்னுடைய ரகசிய தகவலாளி கொடுத்த தகவலின் அடிப்படையில் பள்ளிநேலியனூர் ரயில்வே கேட் அருகே பதுங்கி இருந்த எதிரி ஜனா (எ) சின்ன ஜெனா

என்பவரை போலிஸ் பார்ட்டி சகிதம் பள்ளிநேலியனூர் ரயில்வே கேட் அருகே சென்றபோது எதிரி தப்பிக்க முயன்றார், பள்ளியனூரிலிருந்து ஆயூரை நோக்கிச் செல்லும் தண்டவாளத்தில் ஓடிக்கொண்டிருந்தபோது எதிரி தண்டவாளத்திற்கு கீழே விழுந்தார். எதிரியின் இடது காலில் அடிப்பட்டு எதிரி ஓட முடியாமல் விழுந்து கிடந்தார் நான் போலிஸ் பார்ட்டி சகிதம் அங்கு சென்று எதிரியை தண்டவாளத்திலிருந்து வெளியே தூக்கி வந்து விசாரித்தபோது வழக்கில் சம்பவம் பற்றி கூறியதால் வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி என்று எதிரிக்கு தக்க காரணம் கூறி மாலை 4.30 மணிக்கு கைதுக்கான காரணம் கூறி கைது செய்தேன். காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்து மருத்துவ நமுனா எடுத்துவரச்சொன்னேன் எதிரியிடம் விசாரணை செய்தபோது எதிரி ஜனா (எ) சின்ன ஜனா என்பவர் எவ்வித அச்சுறுத்தலும் ஆசைவார்த்தையும் இல்லாமல் தானாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அதனை சாட்சிகள் மணிமாறன் மற்றும் மணிபாலன் ஆகியோர்கள் முன்னிலையில் மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரையில் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன் அதன் பின்னர் மேற்படி சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பின்னல் 5.40 மணிக்க காவல் நிலையத்திலிருந்து எடுத்து வரப்பட்ட மருத்துவ நமுனா மூலம் எதிரியை மருத்துவ சிகிச்சைக்காக விழுப்புரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று 6.30 மணிக்கு எதிரிக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. அதன்பின்னர் மருத்துவ சிகிச்சை முடிந்து மேற்படி மருத்துவமனையிலிருந்து எதிரியை அழைத்து'கொண்டு காவல் நிலையத்திற்க 8.40 மணிக்கு எதிரி சகிதம் நிலையம் வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து பாராவிடம் ஒப்பிவி'த்தேன். அதன் பின்ன்ர் காவல் நிலையத்தில் சாட்சிகள் 1 முதல 3 வரையிடம் விசாரணை செய்த தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகளை தக்க வழி காவல் மூலம் விழுப்புரம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களிடம் ஆஜர்படுத்தி நீதிமன்ற அடைப்புக் காவலுக்கு உட்படுத்தினேன். அதன் பின் கைப்பற்றிற் வழக்கு சொத்துக்களை பாரம் 95 **அ.த.சா.ஆ9** மூலம் நீதிமன்றத்திற்கு அனுபபி வைத்து சிபிஎண். பெற்றேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள்

ஜனா (எ) ஜனார்த்தனன் மற்றும் கதிரவன் ஆகியோர்கள் மீது பிரிவுகள் 294(பி), 384, 353, 506(2) 307 இதச உ/இ 3 of TNPPD Actல் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

2.5.2018 அன்று பகல் 1 மணிக்கு முன்பாக நான் என்ன பணியில் இருந்தேன் என்றால் நான் ரோந்து பணிக்காக வெளியில் சென்றிருந்தேன். ரோந்து பணி முடிந்து பகல் 1 மணிக்கு தான் நான் காவல் நிலையம் வந்தேன் என்றா'ல் சரிதான். ரோந்த பணியில் இருந்த எனக்கு உதவி ஆய்வாளர் சம்பவம் பற்றி தகவல் கொடு'த்தாரா என்றால் தகவ்ல் கொடுத்தார். அசல் முதல் தகவல் அறிக்கை எத்தனை மணிக்கு பதிவு செய்தேன் என்றால் பகல் 1 மணிக்கு, பார்வை மகசர் எத்தனை மணிக்கு தயார் செய்தேன் என்றால் பகல் 1.30 மணியிலிருந்து 2 மணி இருக்கும். வழக்கு சொத்துக்கள் சம்பவம் நடந்ததாகசொல்லப்படும் இடத்திலிருந்து கைப்பற்றினேன் என்றால் சரிதான். வரைபடம் அ.தசா.ஆ7ல் நான் கைப்பற்றியதாக சொல்லப்படும் சான்று பொருட்கள் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எத்தனை மணிக்கு எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன் என்றால் 2.5.2018 அன்று இரவு சுமார் 9 மணிக்கு மேல் அனுப்பி வைத்தேன். இந்த வழக்கில் நான் தான் முழு விசாரணையும் செய்தேன் என்றால் சரிதான். உதவி ஆய்வாள்ர் பாலமுருகன் கொடுத்த தனி அறிக்கை புகாரில் சொக்கலிங்கம்எ ன்பவரது டீ கடையில் தான் எதிரிகள் பிரச்சனை செய்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அந்த சொக்கலிங்கம் என்பவர நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் அவரை விசாரித்தேன் ஆனால் பயத்தின் காரணமாக அவர் வாக்குமூலம் எதுவும் தரவில்லை. இந்த வழக்கின் அடிப்படை ஆதார வழக்காக வைத்து தான் எதிரி ஜனா (எ) சின்ன ஜனா மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டார் என்றால் சரிதான் இது தவிர வேறு வழக்குகளும் அவர் மீது நிலுவையில்

இருந்தது. தனி நபர்கள் யாராவது ஜனா (எ) சின்ன ஜனா மீது மாமூல் கேட்டார் என்று புகார் ஏதாவது கொடுத்துள்ளார்களா என்றால் பயத்தின் காரணமாக யாரும் கொடுக்கவில்லை. நான் சாட்சிகளை விசாரித்து பதிவு செய்த சாட்சிய வாக்குமூலங்கள் எப்போது நீதிமன்றத்திறகு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் 2.5.2018 அன்றே அனுப்பி வைக்கப்பட்டது. உதவி ஆய்வாளர் பாலமுருகன் பொய்யாக தனி அறிக்கை தாக்கல் செய்திருந்தார் அதன் அடிப்படையில் எதிரி ஜனா (எ) சின்ன ஜனா என்பவரை சட்ட விரோத காவலில் வைத்திருந்து அவர் கால் முறிக்கப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால்சரியல்ல. நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் காவல் நியைத்தில் வைத்து ஆவணங்களை தயாரித்து எதிரிகள் மீது தவறுலான குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/–.A.Tamilselvan, M.L.,

Principal Subordinate Judge,

Villupuram